மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன். இப்கோ நிறுவனத்திடம் அதைப்பற்றிக் கேட்டு இருக்கிறோம். அவர்கள் இன்னும் அங்கிருந்து விடையளிக்கவில்லை. அங்கேயிருந்து கருத்துரு வந்து சேர்ந்த வுடன் அதைப்பற்றிய முடிவைத் தமிழக அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 292, திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

292—

கனரகத் தொழிற்சாலைகளில் வேலை நேரத்தைக் குறைத்து ஷிப்ட் முறையை அதிகரித்தல்.

*6047 — திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் பெரிய கனரகத் தொழிற்சாலைகளில் 8 மணி நேர வேலையை 6 மணி நேர வேலையாக்கி, 4 முறை ஷிப்ட் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் கொண்டுவரப்படும்?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இது போன்ற கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனை யில் இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே வேலையில் லாத் திண்டாட்டம் மிகவும் அதிகமாக உள்ளது என்பதை நாம் அறிவோம். இருந்தபோதிலும் நம்முடைய தமிழகத்தி னுடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் ஒரு இலட்சம் பேருக்கு, பெண்களுக்கு

[1992 மார்ச் 20]

பல்வேறு துறைகளிலும் வேலை வாய்ப்பு கொடுத்து வருகிறோம். ஆனால் பெரிய கனரகத் தொழிற் சாலைகளிலே, கிட்டத்தட்ட 150 பஞ்சாலைகளைக் கொண்ட தமிழகத்திலே இந்த 4 முறை ஷிப்ட் கொண்டு வர அரசு முன் வந்தால் கிட்டத்தட்ட 7 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, இவைகளைப் பரிசீலனை செய்து அரசு கொண்டு வந்தால் இந்தத் தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவியின் ஆட்சியிலே வேலை யில்லாத் திண்டாட்டம் இன்னும் குறைவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும், ஏழை எளியவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதையும் அறிந்து அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1948 ஆம் வருடத்திய தொழிற் சாலைகள் சட்டம் பிரிவு 51-ன்படி, ஒரு தொழிலாளியை வாரத்திற்கு 48 மணி நேரம் பணியில் ஈடுபடுத்தலாம்; எனவே 8 மணி நேரம் தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு வேலை கொடுக் கப்பட வேண்டுமென்பது உலகத் தொழிலாளர்களுடைய மாநாட்டிலே முடிவு செய்யப்பட்டு, அது இந்தியத் தொழிற் சாலை சட்டத்திலே பிரிவு 51-ன்படி இன்றைக்கு அமல்படுத்தப் பட்டு வந்து கொண்டிருக்கிறது. எனவே, இதைக் குறைப்பதற்கு இப்பொழுது அரசினுடைய கருத்துரு எதுவும் பரிசிலனையில் இல்லைஎன்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு, சுருக்கமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வேகமாக முன்னேறி வருகின்ற விஞ்ஞானக் காலத்திலே இதுபோன்ற சட்டங்களை மாற்றி, வேலை வாய்ப்பைக் கொடுப்பதற்கு அந்தச் சட்டத்திற்கு மாற்றுச் சட்டம் உருவாக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது மைய அரசினுடைய சட்டம். எனவே, இப்பொழுது இதுபற்றிய கருத்துரு எதுவும் அரசி னுடைய பரிசிலனையில் இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 293, திரு. கே. சிங்காரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.